# எம்.எச்.எம். அஷ்ரபின் இலக்கியப் பணிகள்: ஓர் அறிமுக உசாவல்

எம்.ஏ.எம். றமீஸ்[9]

Correspondence: rameezmam@seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

ஈழத்து இலக்கிய வரலாற்றில் அஷ்ரப் குறிப்பிடத்தக்க ஒருவர். அரசியலுக்கு அப்பால் அவரிடம் கவித்துவம் நிரம்பியிருந்தது. அஷ்ரப் ஒரு அரசியல்வாதியாக அன்றி, இலக்கியவாதியாகவே முதலில் அறிமுகமானார். அவரது இலக்கியத்திற்குள் அரசியல் நிரம்பியிருந்தது. ஒரு கட்டத்தில் அஷ்ரப் ஒரு இலக்கியவாதி என்பதை விட நன்கு பண்பட்ட ஆட்சியாளனாக மாறினார். அதன்போதும் அஷ்ரபின் கவித்துவ புலமை குறைந்துவிடவில்லை. அரசியலிலிருந்த துணுக்குகளை அஷ்ரப் இலக்கியத்தினூடாக சிந்திக்கலானார். அவரது கம்பீரமானு மேடைப் பேச்சுக்களின் ஊடே அவரது படைப்பாற்றலும் கவிதைகளை ஒப்புவிக்கும் திறனும் மென்மேலும் வளர்ந்தது. அஷ்ரப் 1980களில் அரசியலில் முழு மூச்சாக ஈடுபட்டவர். அதற்கு முன்னமிருந்தே தேசிய கட்சிகளிலும் தமிழரசுக் கட்சியிலும் அங்கத்துவம் வகித்தவர். பின்னர் முஸ்லிம் காங்கிரஸ் மூலம் அரசியலில் உச்சத்திற்கு வந்தாலும் அவரது அனைத்து உயர்ச்சிக்கும் அவரது பாடசாலை வாழ்க்கைப் பின்னணியும் இலக்கிய ஆளுமைப் பண்பும் காரணமாக இருந்தது. இந்தவகையில் கவிஞர் எம்.எச்.எம். அஷ்ரபின் ஆக்கப் பணிகள் குறித்த அறிமுகக் கலந்துரையாடலொன்று இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளது.

**பிரதான சொற்கள்:** ஈழத்து இலக்கிய வரலாறு, அஷ்ரப், இலக்கியம், கவித்துவம்

## அறிமுகம்

*''நண்பர் எம்.எச்.எம்.அஷ்ரப் அரசியலில் நுழைவதற்கு முன்பிருந்தே கவிதைகள் எழுதி வருபவர். 1960 களின் தொடக்கத்திலிருந்தே இவரது கவிதைகள் பத்திரிகைகளில் பிரசுரம் பெற்றன. கல்முனைப் பிரதேசத்தின் குறிப்பிடத்தக்க கவிஞர்களில் இவரும் ஒருவர்.''* இது எம்.எச்.எம்.அஷ்ரபின் *'நான் எனும் நீ' கவிதைத் தொகுப்புக்கு எம்.ஏ.நு'.மான் எழுதிய அணிந்துரையின் ஒரு சிறு பகுதி. 1999 இல் இந்தத் தொகுதி வெளிவந்தது. அப்போது அஷ்ரப் அரசியலில் உச்சத்தில் இருந்த காலம். அக்காலப் பகுதியில் வெளிவந்த இந்நூலுக்கே நு'.மான் மிகக் கவனமாக எழுதிய அணிந்துரையின் குறிப்பே மேலுள்ளது.*

*அஷ்ரப் சம்மாந்துறையில் பிறந்தவராயினும் கல்முனையிலேயே வாழ்ந்தவர். புலவர்மணி அ.மு.ஷரிபுதீன் அவர்கள் அதிபராக இருந்த பாடசாலையில்தான் அஷ்ரப் கல்வி கற்றார். புலவர்மணி பற்றி அஷ்ரப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: ''இந்த அஷ்ரபைக் கண்டுபிடித்த கொலம்பஸ் புலவர்மணி அ.மு.ஷரிபுதீன் அவர்கள்தான்''. ஆகவே முதலில் அஷ்ரப் அவர்கள் ஒரு புலவர்மணியினால்தான் வார்க்கப்பட்டிருக்கிறார்.*

*ஆரம்பக் கல்விக்குப் பின்னர் அஷ்ரப் இரண்டு பாடசாலைகளில் உயர் கல்வியைக் கற்றிருக்கிறார். ஒன்று கல்முனை பாத்திமாக் கல்லூரி. மற்றது கல்முனை வெஸ்லி உயர்தரக் கல்லூரி. கல்முனை வெஸ்லிக் கல்லூரியில் அஷ்ரபை உறுதிப்படுத்தியவர் கல்விமான் எஸ்.ஜே.வில்சன். அங்கு அஷ்ரப் விளையாட்டு, கலை, இலக்கியம், கையெழுத்துப் பத்திரிகை முதலானவற்றில் தடம் பதித்து ஆற்றல் உள்ளவராக தன்னை வெளிப்படுத்தினார்.*

*'முளரி' என்ற ஒரு சஞ்சிகையை அஷ்ரப் அவரது ஆசிரியர் ஒருவரோடு சேர்ந்து வெளியிட்டார். இந்த 'முளரி' பத்திரிகையைத் தயாரித்தவர் அஷ்ரப்தான். இப்பத்திரிகைக்கான ஆக்கங்களை அவரே திரட்டினார். அப்பத்திரிகையில் எழுதியவர்கள் ஈழத்தின் பிரபலமான எழுத்தாளர்கள் நீலவாணன், ஜீவா ஜீவரட்ணம், பாண்டியூரன், நு'.மான், அன்பு முகைடீன், யுவன், பஸில் காரியப்பர் முதலானோர். இந்தத் தொடர்பு அஷ்ரபை இலக்கியத்தில் ஆக்கபூர்வமானவராக உருவாக்கியிருக்கிறது.*

வெஸ்லிக் கல்லூரியே அஷ்ரபை ஒரு இலக்கியவாதியாகவும் நல்ல பேச்சாளனாகவும் நல்ல விவாதத் திறமைமிக்கவராகவும் ஆக்கியது. சமூகத்திலும் அஷ்ரப் ஒரு இயக்கவாதியாகவும் நல்ல மாணவனாகவும் நல்ல சமயவாதியாகவும் நல்ல சமூகவாதியாகவும் பேர் பெற்றவர். ஈழத்தின் பிரபலமான இலக்கியவாதிகள் நுஃமான், பஸீல் காரியப்பர், எச்.எம்.பாறூக், சோலைக்கிளி ஆகியோர் அஷ்ரபின் இலக்கிய நண்பர்கள். இதனூடேதான் அஷ்ரபின் இலக்கிய ஆளுமை வளர்கிறது.

அஷ்ரப் எழுதிய முதற் கவிதை பற்றி அறிய முடியவில்லை. ஆனால் 1962.09.16 இல் 'தேசிய முரசு' என்ற பத்திரிகையில் அவர் 'தாய்' என்ற கவிதையை எழுதினார். அந்த கவிதை வெளிவந்த பின்னர் 1980கள் வரை தினபதி, தினகரன், தேசிய முரசு, செய்தி, விவேகி, ராதா, தாய்நாடு, புதுப்பாதை, அல் இஸ்லாஹ், சுதந்திரன், தமிழ் முரசு, மித்திரன், சிந்தாமணி, மாணவன் முதலான பத்திரிகைகளில் அவ்வப்போது எழுதி வந்துள்ளார். இவை எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து நூலாக வெளியிட வேண்டும் என்ற ஆர்வத்தினை எம்.ஏ.நுஃமான், அன்பு முகைடீன் முதலானவர்கள் பல தடவை கிளரியிருக்கிறார்கள். ஆனால் அது அஷ்ரப் அரசியலில் உச்சத்திலிருக்கும்போதே சாத்தியமானது. அதனால் அவரிடமிருந்த நல்ல கவிதைகளின் பக்கம் அரசியல் சாயமிக்கதாக மாறிவிட்டது. அதன் முக்கியத்துவம் பெருமளவு இழக்கப்பட்டு விட்டது எனலாம்.

### குழந்தைப் பாடல்கள்

அஷ்ரபின் கவிதைகளில் குழந்தைப் பாடல்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் இருக்கிறது. சமகாலத்தில் கூட நல்ல குழந்தைப் பாடல்களைக் காண்பது மிக அரிது. நுஃமானும் இதை சிலாகித்துக் கூறியுள்ளார். அஷ்ரபை ஒரு குழந்தைக் கவிஞராக அவர் அடையாளப்படுத்தியிருக்கிறார். "அஷ்ரப் குறிப்பிடத்தக்க ஒரு குழந்தைக் கவிஞரும் கூட என்பதை இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள பதினெட்டுக் குழந்தைக் கவிதைகள் எடுத்துக் காட்டுகின்றன. 'தங்கையே' என்ற தலைப்பில் உள்ள அறம் போதிக்கும் பாடலைத் தவிர ஏனையவை சிறுவர்களின் அனுபவ வலயத்திற்கு உட்பட்டவையாகையால் அவர்களது அழகுணர்ச்சியை தூண்டுவனவாய் அமைந்துள்ளன. கவிஞர் இவற்றை ஒரு சிறு தனித் தொகுப்பாக பிரசுரித்தால் சிறுவர்கள் தாமே அவற்றைப் பயன்படுத்துவதற்கு அது வாய்ப்பாக அமையும்." என்ற எம்.ஏ.நுஃமானின் கூற்று மிகுந்த கவனத்திற்குரியது (அஷ்ரப்,2016:XII).

எடுத்துக்காட்டாக 'தாய்' என்ற குழந்தைப் பாடலைக் குறிப்பிட முடியும்.
என்னைப் பெற்றதாய்
ஏந்தலான தாய்
பத்துமாதம் சுமந்து
பாங்காய் வளர்க்கும் தாய்!

குற்றம் பொறுக்கும் தாய்
சுற்றம் சேர்க்கும் தாய்
காய்ச்சல் வரும் போது
கதறியழும் தாய்!

கண்ணைப் போன்ற தாய்
கருத்தாய் வளர்க்கும் தாய்
காலம் வந்த போது
கடவுளை வணங்கும் தாய்!

அன்பின் உருவம் தாய்

*ஆசையின் வடிவம் தாய்*
*பண்பு நிறை வாழ்வினை*
*படித்துத் தரும் தாய்! (அஷ்ரப்,2016:288)*

மிக இயல்பாக அமைந்துள்ள இப்பாடல் போல கடலும் சிறுவனும், சிட்டுக் குருவி ஓடிவா!, கப்பல், அழகுக் காட்சிகள், தென்னை மரம், பேனா, மாடு, தங்கப் பவுண் யாரம்மா, படகும் நிலவும், தங்கையே, மதியே வா, நல்ல பிள்ளை, தம்பி ஓடி வா, பாக்கு மரம், பந்து, அழகுக் கனவுகள், குதிரை வண்டி முதலானவை இவ்வகையின. இப்பாடல்களுள் பெரும்பாலானவை இயல்பாக அமைந்திருப்பதோடு புதிய பாணியிலும் புதிய கற்பனையிலும் அமைந்தவை. கடலும் சிறுவனும் என்பது கடலும் சிறுவனும் பேசுவது போன்ற பாணியில் அமைந்தவை. கப்பல் கடலில் கம்பீரமாய் நிமிர்ந்து நிற்பது குறித்து, கவிஞன் சிறுவனுக்கு புதியதோர் பார்வையைப் பாய்ச்சுகிறான்.

*கடலில் வரும் கப்பல்*
*கண்ணைப் பறிக்கும் கப்பல்*
*படகுகள் பக்கம் வந்தால்*
*பதுங்கி வரும் கப்பல்!*

*ஆடிவரும் கப்பல்*
*அலைகல் மோதும் கப்பல்*
*பாடி நின்று நாங்கள்*
*பார்த்து மகிழும் கப்பல்!*

*பெரியதொரு கப்பல்*
*பெருமை பெற்ற கப்பல்*
*உரிமையோடு உலகை*
*உற்று நோக்கும் கப்பல்!*

*இரும்பாலான கப்பல்*
*இங்கிலாந்துக் கப்பல்*
*அருகில் நின்று நாங்கள்*
*அதிசயிக்கும் கப்பல்! (அஷ்ரப்,2016:291)*

கப்பல் கம்பீரமாய் தவழ்வதை உரிமையோடு உலகை உற்று நோக்குவதாக கவிஞர் குறிப்பிடுவது விதந்து பேசத்தக்கது. இதுபோன்று இசையும் ஓசை நயமுமிக்க கவிஞரின் குழந்தைப் பாடல்கள் பெரிதும் கவனிக்கப்பட்டதாக தெரியவில்லை.

**கவிதைகள்**

சுமார் முப்பதாண்டுகளுக்கு மேல் அஷ்ரப் எழுதிய 179 கவிதைகள் அவரது 'நான் எனும் நீ' எனும் தொப்பில் உள்ளது. இது ஈழத்தில் வெளிவந்த தனிநபர்களின் கவிதைத் தொகுதிகளில் மிகப் பெரியது. அரசியலை மட்டுமன்றி, சமூகத்தின் பல்பரிமாண இயக்கத்தினை கவிதைகளினூடாக வெளிக் கொண்டுவரும் இத்தொகுதி, ஈழத்து கவிதை இலக்கிய வரலாற்றில் மிக முக்கியமானது.

இத்தொகுப்பில் காதல் கவிதைகள், சமய சார்பானதும் அரசியல் சார்பானதுமான கவிதைகள், குழந்தைப் பாடல்கள், இசைப் பாடல்கள் என பல தரப்பட்ட கவிதைகளை அஷ்ரப் எழுதியுள்ளார். அஷ்ரபின் விரிந்த உலோகாயுத, அரசியல், சமய சிந்தனைகளைப் புரிந்துகொள்வதற்கு இக்கவிதைத் தொகுதி நன்கு பயன்படுகிறது. அதேநேரம் இலங்கையின் அரசியல், சமூக, இலக்கியப் போக்குகளில் ஏற்பட்ட மாற்றங்களையும் அவரது கவிதைகள் பிரதிபலிக்கின்றன.

எண்ணிக்கையில் அதிகளவு கவிதைகளை எழுதுகிற போது கவிதைப் பண்புகளில் நின்றும் அவை சோர்ந்து விடுவதும் உண்டு. ஆனால் அஷ்ரபின் ஆரம்பகால கவிதைகளும் இடைக்கால கவிதைகளும் அவ்வாறானவை அல்ல. யாப்பில் நின்றும் சற்றும் பிசகாத கவிதைகளையும் அவர் எழுதியுள்ளார். அவ்வாறான கவிதைகளுல் 1969 இல் ‘ராதா’ எனும் பத்திரிகையில் அவர் எழுதிய ‘கவிதைக் காட்சிகள்’ என்ற கவிதையும் முக்கியமானது.

> அணியணியாய் பயிர் வயலில் அழகு காட்டும்
> அருகிலுள்ள ஆற்றில் நீர் நிறைந்தே ஓடும்
> புனலிடையே நீராடும் மங்கையர்கள்
> புன்னகையைக் காண்பதற்காய் மலர்கள் பூக்கும்
>
> மணல் வெளியில் கிடக்கின்ற பளிங்குக் கற்கள்
> மனமகிழ்ந்து ஆதவனைக் கண்டு மின்னும்
> நினைவினிலே உறைந்துள்ள கற்பனைகள்
> நீண்ட பெரும் கவிதைகளாய் உருவெடுக்கும்!

எழுபதுகளிலிருந்து புதுக் கவிதைகளையும் அவர் எழுதியுள்ளார். அவரது பெரும்பாலான கவிதைகள் கவித்துவம் விரவி வருவன. அரசியல் சிக்கல்களுக்கு அப்பால் அவர் கவிதை புனைந்ததை கலைஞர் மூ.கருணாநிதி தமது வாழ்த்துரையில் வெளிப்படுத்தியுள்ளார்.

> அங்கு நீயும் நின்றுகொண்டு
> கண்ணடிக்கிறாய் - கயல்
> கண்ணடிக்கிறாய்!
> நொங்கு போன்ற என் மனத்தை
> நோகவைக்கிறாய் - ஏனோ
> நோகவைக்கிறாய்! (அஷ்ரப்,2016:V)

அரசியல் கவிதைகள் என்ற பெயரில் அவருடைய கவிதைகள் ஒதுக்கப்பட வேண்டியன அல்ல. அவற்றினூடே முஸ்லிம் அரசியல் பாதையின் தனித்துவத்தினை அவர் வரைந்து காட்ட முற்பட்டிருக்கிறார். தேசிய அரசியலில் இருந்து முஸ்லிம் அரசியல் வேறாக்கப்பட வேண்டும் என்பதையும் தேசிய அரசியல் சூழ்நிலையினையும் அவருடைய ‘பந்தாட்டம்’ என்ற கவிதை மிக அற்புதமாக விபரிக்கிறது.

> பச்சை, நீலக் குழுவினர்கள்
> பந்தை அடித்தே ஆடுகிறார்
> உச்சி நோக்கி ஒரு வீரன்
> உயரப் பந்தை உதைத்தனால்
> உச்சை நோக்கிச் சென்ற அது
> உடனே எல்லை தனைத்தாண்டி
> நச்சென் றப்பால் விழுகிறது
> நடுவர் ஆட்டம் நிறுத்துகிறார்!
> ………………………
> எந்த வீரர் உதைத்தாலும்
> எந்தப் புறமும் சாராது
> சொந்தக் கட்சி ஒன்றின்றி
> சுழன்று பந்தும் அலைகிறது
> இந்த வாறாய் ஆடுகையில்
> இனிதாய் ஆட்டம் முடிந்திடவே
> இரண்டு குழுவும் பந்தினையே

*ஏனோ விட்டுச் செல்கிறது! (அஷ்ரப்,2016:75-76)*

இருண்ட பாதை இது' என்ற கவிதையிலும் அவர் இதனையே சொல்ல விளைகிறார்.

நாங்கள் யார்! எங்கெங்கு வாழுகின்றோம்
நாங்கள் யார்? எங்களுடைய மொழியென்ன? (அஷ்ரப்,2016:41)

என்று தமது தனித்துவம் குறித்து அவர் சிந்திக்கின்றார். 'புதிய பாதை' கவிதையின் உள்ளே மீண்டும் ஒரு தனித்துவமான பாதையை அவர் கோருகிறார். இதுபோன்ற பல கவிதைகளை அவர் எழுதியுள்ளார். தமிழ், முஸ்லிம், சிங்கள முரண்பாடுகள் பற்றியும் அவரது பல கவிதைகள் பேசுகின்றன. 'மணியோசை' என்ற அவரது கவிதை மிகப் பிரபலமானது. சிங்கள பௌத்த பேரினவாதத்தின் கெடுபிடிகளை மணியோசையின் ஊடாக அவர் பதிவாக்கியிருக்கிறார். பெரிய விசாரையில் மணியோசை கேட்கிறது என்று ஆரம்பிக்கும் அவர் கவிதை:

விசாரையும்
விசாரைக்கருகிலுள்ள
குளங்களும்
குளங்களுக்கருகேயுள்ள
குப்பைகளும் அங்கு வரும்
நாய்களும் புனித மெனில்
நாம் மட்டும் அசூசிகளா? (அஷ்ரப்,2016:36)

என்று அவர் கேள்வி எழுப்புகிறார். அஷ்ரபின் இலக்கிய ஆளுமைகளுள் மூன்று கவிதைகள் மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றன. அவற்றில் ஒன்று 'எஸ்.ஜே.வி. யை என் இறக்கையில் காணுங்கள்'. எஸ்.ஜே.செல்வநாயகம் குறித்த இக்கவிதை தமிழ் முஸ்லிம் உறவின் நீட்சியை மிக அற்புதமாக பதிவு செய்கின்றது. இது விரிவாகவும் தனியாகவும் பார்க்க வேண்டிய ஒரு கவிதை நூல்.

1975 இல் 'சேர் பொன். இராமநாதன்' என்ற ஒரு கவிதையை அவர் எழுதியுள்ளார். இக்கவிதை 1975.09.04 இல் தினகரனில் வெளிவந்தது. இக்கவிதை அவரது 'நான் எனும் நீ' என்ற கவிதைத் தொகுப்பில் இடம்பெறவில்லை. இராமநாதன் குறித்த அரசியல் சங்கடங்கள் பின்னர் அக்கவிதையை அவரது கவிதைத் தொகுதியில் பிரசுரம் செய்வதற்கு தடையாக இருந்திருக்கலாம். எஸ்.ஜே.வி பற்றிய கவிதை போன்று இதுவும் ஒரு நீண்ட கவிதை. இக்கவிதை வெளிவந்த 1970கள் சிலவேளை அஷ்ரப் தமிழரசுக் கட்சி சார்ந்தவராக இருந்திருக்கக் கூடும்.

அஷ்ரபின் சமயக் கவிதைகள் பல உள்ளன. சமயக் கொள்கைகள், கடமைகள் குறித்த விமர்சனப் பார்வையினை அவர் கவிதைகளினுடாக வெளிப்படுத்தியுள்ளார். அவர் குர்ஆனின் இருதயமாகக் கொள்ளப்படும் 'யாசின்' என்ற அத்தியாயத்தினை, அதன் தமிழ் மொழிபெயர்ப்பினை 'நிந்தித்தும்மை நிராகரித்தல்' என கவிதையில் பாடியுள்ளார். இதுவொரு தனி நூலாகவும் வெளிவந்துள்ளது. இவ்வாறே பல தரப்பட்ட கவிதை முயற்சியில் ஈடுபட்ட அவர் சிறுகதையும் எழுதியுள்ளார். 1975.09.07 அன்று தினகரன் வார மஞ்சரியில் 'நீதிக்காகப் போராடுகின்றான் ஒரு சட்டத்தரணி' என்ற அவரது கதை வெளிந்தது. அக்கதை பலரதும் பாராட்டைப் பெற்றது. அ.ஸ.அப்துல் ஸமது தொகுத்த 'முற்றத்து மல்லிகை' எனும் முஸ்லிம் சிறுகதையாளர்களின் கதைத்தொகுப்பிலும் அது இடம்பெற்றுள்ளது.

### இசைப் பாடல்கள்

அஷ்ரபின் கவிதைகளை விட அஷ்ரபை அதிகம் ஞாபகப்படுத்துவதும் நிலைத்திருக்கச் செய்வதும் அவரது இசைப் பாடல்களே. 'ஆயிரம் விளக்குடன் ஆதவன் எழுந்து வந்தான்' என்ற பாடல்

இன்றும் முஸ்லிம் காங்கிரசின் பிரச்சாரப் பாடலாக எல்லோர் மனதிலும் நிலைத்திருக்கிறது. அவ்வகையில் முஸ்லிம் பெண்களை அரசியல்மயப்படுத்துவதிலும் அவர் மிகுந்த கவனம் செலுத்தினார். அடக்கப்பட்டு வீட்டுக்குள்ளே இருக்கிற பெண் சமூகம் வெளியே வரவேண்டும் என்றும் அவர்களது வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்றும் அவர் வற்புறுத்தினார். மூன்று நேரமும் சாப்பிட முடியாத பெண்களையும் சீதனமின்றி வாழ்க்கையை தொலைத்தவர்களையும் கட்டிய கவணவன்மார் கைவிட்ட பெண்களையும் வருமானமும் தன்மானமும் இன்றி வாழும் பெண்களையும் அவரது கவிதைகளும் பாடல்களும் தட்டி எழுப்பின.

கிராமங்களில் முஸ்லிம் பெண்கள் வீண் பொழுதுபோக்குவதை அவரது 'காக்கா வண்டி' என்ற பாடல் மூலம் அவர் கண்டிக்கிறார். அப்பாடலில்:

> *பன்னிருக்குப் பாயிழைப்போம்!*
> *மண்ணிருக்குப் பானை செய்வோம்!*
> *தறியிருக்குப் பிடவ நெய்வோம்!*
> *தயிரிருக்கு நெய் கடைவோம்!*
> *மிஷினிருக்கு உடுப்புத் தைப்போம்!*
> *நம்ம கால்ல நாம நிப்போம்! (அஷ்ரப்,2016:36)*

**கட்டுரைகள்**

கொலைக் குற்றவாளி ஒருவனை நிரபராதி என்று விவாதிக்கின்ற அவரது சட்ட ஆளுமை இக்கதையில் தெற்றெனத் தெரிகிறது. ஒரு நல்ல சிறுகதையை எழுதிய இவர் வேறு சிறுகதை எழுதியுள்ளரா என்பது குறித்து அறியமுடியவில்லை. அஷ்ரபின் கவிதைகளைப் போன்று அவரது கட்டுரைகளும் மிக முக்கிய இடத்தினைப் பிடித்துள்ளன. சுரண்டலை ஒழித்த புரட்சி இயக்கம் என்ற தலைப்பிலும் 1975.10.05 அன்று தினகரனில் முக்கியமான கட்டுரையினை எழுதினார். வட்டி (interest), வீட்டு வாடகை (rent), குத்தகை (lease), ஈடொற்றி முதலானவை சமூக, பொருளாதார அம்சத்தில் விவாதத்திற்குரிய முக்கியமான விடயங்கள். அனுமதிக்கப்பட்ட பொருளாதார விடயமாக இருந்தாலும் ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தினை சுரண்டுகின்ற மிக மோசமான பாதகச் செயல்கள் இவை என்பதை அவரது கட்டுரையில் வெளிப்படுத்தினார்.

நோன்பு காலத்தில் பத்திரிகைகள் ரமழான் சிந்தனைகளை வெளியிடும். அவ்வகையில் 1975 செப்டம்பர் மாதம் தினகரன் புத்தம் புதிய மலர்கள் என்ற தலைப்பில் அஷ்ரப் எழுதிய ரமழான் சிந்தனைகளை வெளியிட்டது. இவை பொன்மொழிகள் போன்றமைந்த துணுக்களும் அல்ல; சிந்தனை என்ற பெயரிலமைந்த கட்டுரைகளும் அல்ல. மிக விரிவான ஆய்வுக் கட்டுரைகளாக அவை அமைந்தன. அஷ்ரப் சமூக சுரண்டலை மிக மூர்க்கத்தனமாக எதிர்த்தார். அவ்வகையில் பாகப் பிரிவினை, வாரிசுரிமை பற்றி ஆய்வு ரீதியாக தனது கருத்துக்களை புத்தம் புதிய மலர்களில் முன்வைத்தார். நோன்பினுடைய அடிப்படை பரிசுத்தவான்களை உருவாக்குவதாகும். மேலும் அது வறுமையை உணர்வதோடும் தொடர்புபட்டது. "துரு எவ்வாறு இரும்பை சாப்பிட்டுவிடுகின்றதோ அவ்வாறேதான் வறுமை நம்பிக்கையை அழித்து விடும்" என்ற முஹம்மது நபியின் கூற்றினை தனது கட்டுரைகளில் சான்றுகளுடன் வெளிப்படுத்தினார்.

மனித சமூகத்திற்கு இன்றியமையாத சமூக, பொருளாதாரக் கொள்கைகளை அவர் தொடர்ச்சியாக எழுதி வந்தார். இறை நம்பிக்கை, இறை - இறைமை, இறை கட்டளைக்கு மாறு செய்தல், சமூக சீர்கேட்டுக்கு காரணமாக அமைதல், தொழுகையும் சமூக அமைப்பும், மனிதர்கள் சகோதரர்கள், ஸகாத், பொருளை சேர்த்து வைக்காது சுற்ற வைத்தல், திருக்குர்ஆன், இறைவனின் பிரதிநிதியாக மனிதன் அமைதல், ஜிஹாத் என்பது சமூக சீர்கேடுகளுக்கு எதிரானது, இறைவனின் சட்டம், தனிமனிதனின் அடிப்படைத் தேவைகளான உடை, உணவு, உறையுள், வாகனம், போக்குவரத்து, கல்வி, மனைவி முதலான விடயங்கள், நீதி, நேர்மை, ஒழுக்கம் முதலான பெறுமானங்கள்,

இஸ்லாத்தில் பெண்கள் உழைப்பதற்கு தடையில்லை என்ற கருத்து, செல்வத்தை தருவது பணமல்ல, உழைப்பு என்பது, இஸ்லாமிய சோசலிசம் முதலான கருத்துக்களை அவர் பல எடுத்துக்காட்டுக்களுடன் முன்வைக்கின்றார்.

“எந்த சமூதாய இளைஞர்களின் இதயங்கள் இரும்பு போன்று இருக்கின்றனவோ. அந்த சமூதாயத்திற்கு வாள்கள் தேவையில்லை” என்ற அல்லாமா முஹம்மது இக்பாலின் கூற்றினை நோக்கி முஸ்லிம் சமூகத்தின் இளைஞர்களை வழிநடத்துவதாக அவரது கட்டுரைகள் அமைந்திருந்தன. பிற்காலத்தில் அஷ்ரப் ஓர் அரசியல்வாதியாக உருப்பெறுவதற்கு இந்த எழுத்துக்கள் அணிசேர்ப்பனவாக அமைந்தன. மணிக் கணக்கிலேயே அவர் மக்கள் மத்தியில் பேசுவதற்கும் பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கும் இந்த எழுத்துக்கள் அவருக்கு களம் அமைத்துக் கொடுத்தன. அஷ்ரப் என்ற எழுத்தாலனால்தான் - அஷ்ரப் என்ற இலக்கியவாதியினால்தான் ஆளுமைமிக்க அரசியல்வாதியாக தொழிற்பட முடிந்தது. தனித்துவம் பற்றி பேசிய அவர் ஈற்றில் எல்லோரும் இனைந்த ஒரு பாதையின் மூலமே இந்நாட்டில் சுபீட்சத்தினை அடைய முடியும் என்ற கருத்தினை முன்வைப்பதற்கு அவரது இலக்கிய மனமே அவருக்கு சிம்மாசனம் இட்டுக் கொடுத்தது.

**உரைகள்**

அஷ்ரபினுடைய ஆக்கங்களினது முக்கியத்துவம் போல அவரது உரைகளும் மிகுந்த முக்கியத்துவம் பெற்றவை. நூற்றுக்கணக்கான அவரது அரசியல் தொடர்பான உரைகள் எழுத்திலே நூலாக வெளிவந்திருக்கின்றன. அவரது பாராளுமன்ற உரைகளின் தொகுப்புக்கள் கூட நூல் வடிவம் பெற்றிருக்கின்றன. இலக்கியம் தொடர்பாக அவரது உரைகளில் ஒன்று இவ்வாறு அமைந்திருக்கிறது. தனித்துவ அரசியல் கருத்தினை முன்வைத்த அவர் முஸ்லிம்களுக்கான தனி இலக்கியம் என்ற கருத்தினை ஆதரிப்பதாக தெரியவில்லை:

“தமிழிலுள்ள எல்லா இலக்கிய முயற்சிகளையும் தமிழ் இலக்கியம் என்கிறோம். தமிழ் இலக்கியம் எனும் பெருங் கடலிலிருந்து இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என்ற ஒரு புதிய பகுதியைத் தோற்றுவிப்பது, தமிழ் இலக்கியத்திற்கு இழைக்கப்படும் பெரும் நஷ்டமாகும். இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என்ற சொற்றொடரை ஏற்றுக்கொண்டால், நாளை தமிழ் இலக்கியம், பௌத்த தமிழ் இலக்கியம், கிறிஸ்தவ தமிழ் இலக்கியம், சைவ தமிழ் இலக்கியம், வைணவ தமிழ் இலக்கியம் என்ற புதுப் பிரிவுகள் ஏற்பட வழிவகுக்கும். அது மட்டுமன்றி மதப் பிரிவுகள் தமிழ் இலக்கியத்தைப் பங்கு வைக்கும் போது, இறுதியில் தமிழ் இலக்கியம் என்ற சொல்வதற்கு ஒன்றுமே இல்லாத நிலை கூட ஏற்படலாம்.

மேலும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அளப்பரிய தொண்டாற்றிய இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்திற்குப் பூரண சொந்தம் கொண்டாட முடியாத நிலையும் ஏற்படும்.... இஸ்லாமிய தமிழ் இலக்கியம் என நாம் வகுத்துக் கொண்டிருப்பது அறிவு ரீதியாக ஏமாற்றிக் கொள்வதாகவே தோன்றுகிறது. எந்த ஒரு மொழியையும் மதங்களின் பெயரால் நாம் புரிந்துகொள்ள முயற்சிக்கக் கூடாது. திருவெம்பாவை, மணிமேகலை போன்ற பேரிலக்கியங்கள் இந்து, பௌத்த அடிப்படையில் தோன்றியதற்காக அவற்றை நாம் இந்து தமிழ் இலக்கியம், பௌத்த தமிழ் இலக்கியம் என்றோ கூறப்போவதில்லை.”

**முடிவுரை**

அஷ்ரப் அரசியலில் பேசப்படுகின்ற அளவு இலக்கியத்தில் பேசப்படவில்லை. ஆனால் அவரது எழுத்துக்கள் மிகுந்த ஆக்கபூர்வமானவை. சமய ரீதியாகவும் சமூக ரீதியாகவும் அவரது கட்டுரைகள் ஆய்வு செய்யப்பட வேண்டியன. அவரது குழந்தைப் பாடல்கள் தனியான தொகுதியாக பிள்ளைகளிடம் கொண்டு சேர்க்கப்பட வேண்டியவை. அவரது அரசியல் கவிதைகள் அரசியல் மாணவர்களால் ஆய்வு செய்யப்பட வேண்டியன. மொத்தத்தில் அஷ்ரபின் இலக்கியம் ஈழத்து இலக்கிய வரலாற்றில் முஸ்லிம்களின் தமிழ் இலக்கியப் பணியிலும் அழுத்தி உச்சரிக்கப்படுவதற்கான ஒரு சிறிதளவேனுமான ஆதாரங்களைக் கொண்டுள்ளன.

**உசாத்துணை**

அஷ்ரப், எம்.எச்.சம். *(2016)*. நான் எனும் நீ – கவிதைத் தொகுப்பு (இரண்டாம் பதிப்பு). கொழும்பு: புதிய வெளிச்சம் வெளியீடு.